# தேசிய கலை விழாவுக்கு பாரதிதாசன் பல்கலை. மாணவர்கள் தகுதி

திருச்சி

மகாராஷ்டிர மாநிலம் கோலாப்பூர் சிவாஜி பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள தேசிய அளவிலான இளையோர் கலை விழா போட்டியில் பங்கேற்க திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இந்திய பல்கலைக்கழக மன்றம் அண்மையில் நடத்திய தென்மண்டல அளவிலான இளையோர் கலை விழாவில், பாரதிதாசன் பல்கலைக்கழக மாணவர்கள் ஊமை நாடகம், பல குரல் ஆகிய போட்டிகளில் பங்கேற்று, வென்றனர்.

இதன்மூலம், தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்கத் தகுதி பெற்ற அந்த மாணவர்கள், பல்கலைக்கழக துணைவேந்தர் வெ.மா.முத்துக்குமாரை அண்மையில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது, பல்கலைக்கழக பதிவாளர் பாபு ராஜேந்திரன், கலைப் பண்பாட்டு ஒருங்கிணைப்பாளர் அ.லட்சுமி பிரபா ஆகியோர் உடனிருந்தனர்.



▲ தேசிய அளவிலான இளையோர் கலை விழா போட்டியில் பங்கேற்கத் தகுதி பெற்ற மாணவர்களைப் பாராட்டுகிறார் பல்கலைக்கழக துணைவேந்தர் வெ.மா.முத்துக்குமார்.